# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 2289/15 – 2022 ජූලි මස 19 වැනි අඟහරුවාදා – 2022.07.19

*2289/15 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு    பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழான கட்டளை*

**2022 ஆம் ஆண்டின் 131 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 4-3/4/2012/D/361.
பி. செ. குறிப்பு இல. : KN/LLRC/PP/02.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜுட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத் தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஹரின் பெர்னான்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
''மிஹிகத மெதுர'',
இல.1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, யுன் 30.

**அட்டவணை**

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், பச்சிலைப்பள்ளி.

2. **காணியின் விபரம்** : வட மாகாணம், கிளிநொச்சி மாவட்டம், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில், KN/79, ஐயகச்சி கிராம உத்தியோகத்தர் பிரிவில், ஐயகச்சி கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2014.07.29 ஆந் திகதிய Ki/PCH/2014/159 ஆம் இலக்க முதற் சுவட்டு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் காணித் துண்டுகளின் எல்லைகள்:

1. **துண்டு 'A' - மணற்காடு - விஸ்தீரணம் : 0.4674 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு B; கிழக்கு: துண்டு B; தெற்கு: வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை); மேற்கு: சதீஸ் பிரதினி உரிமை கோரும் மணற்காடு காணி.

2. **துண்டு 'B' - மணற்காடு - விஸ்தீரணம் : 6.0701 ஹெக்டயார்**

வடக்கு: உரிமை கோருபவர் அறியாத மணற்காடு காணி; கிழக்கு: துண்டு C மற்றும் நவரத்னம் வித்னேஸ்வரன் உரிமை



இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*கோரும் மணற்காடு காணி; தெற்கு: வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை) மற்றும் துண்டு A; மேற்கு: துண்டு A , கனேசு ரஸாமலர் உரிமை கோரும் மணற்காடு காணி மற்றும் வீதி (பிரதேச சபை).*

***3. துண்டு 'C' - மணற்காடு - விஸ்தீரணம் : 2.3883 ஹெக்டயார்***

*வடக்கு: உரிமை கோருபவர் அறியாத மணற்காடு காணி; கிழக்கு: துண்டு D; தெற்கு: நவரத்னம் விக்னேஸ்வரன் உரிமை கோரும் மணற்காடு காணி; மேற்கு: துண்டு B.*

***4. துண்டு 'D' - மணற்காடு - விஸ்தீரணம் : 0.1166 ஹெக்டயார்***

*வடக்கு: உரிமை கோருபவர் அறியாத மணற்காடு காணி; கிழக்கு: வீதி (வீதி பிரதேச சபை); தெற்கு: நவரத்னம் விக்னேஸ்வரன் உரிமை கோரும் மணற்காடு காணி; மேற்கு: துண்டு C.*

EOG 07-0094

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.*